# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2011 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, ஒலகங்கல மஹா சுதர்ஷன பரோபகாரி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2011 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

*2011, ஓகத்து மாதம் 26 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 11.25** **தபாற் செலவு : ரூபா 10.00**

## 2011 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, ஒலகங்கல மஹா சுதர்ஷன பரோபகாரி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2011 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.-ஒ. (கூட்.) 13/2007

### ஒலகங்கல மஹா சுதர்ஷன பரோபகாரி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

"ஒலகங்கல மஹா சுதர்ஷன பரோபகாரி மன்றம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள் களையும், கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்திற்காக இதற்கு முன்னர் இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட மன்றம் எப்பல்வேறு குறிக்கோள் களுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ள தாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாத லாலும் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்களின் நன்மைக்காக இருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம், 2011 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, ஒலகங்கல மஹா சுதர்ஷன பரோபகாரி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

ஒலகங்கல மஹா சுதர்ஷன பரோபகாரி மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும், (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "ஒலகங்கல மஹா சுதர்ஷன பரோபகாரி மன்றத்தின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக் கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) "ஒலகங்கல மஹா சுதர்ஷன பரோபகாரி மன்றம்" என்ற பெயர் மகுடத்தின்கீழ் இடையறா வழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் அது அப்பெயர்கொண்டு வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டதா யிருத்தலும் வேண்டும்.

2-PL 005276 -990 (2010/10)

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) பௌத்த மதத்தைப் பின்பற்றுபவர்களின் ஆன்மீக அபிவிருத்தியின்பொருட்டுத் தேவையான நடைமுறைகளையும் ஒழுக்கநெறி விழுமியங்களையும் ஊக்குவித்தலும் பேணி வளர்த்தலும் ;

(ஆ) பௌத்தர்கள் அனுபவிக்கும் உளரீதியானதும் உணர்வுரீதியானதுமான அழுத்தங்களைத் தணிப்பதற்கு புத்தரால் கற்பிக்கப்பட்ட போதனைகளை அனுசரிப்பதன்மூலம் அவற்றைக் குறைத்தலும் அதன்மூலம் அமைதியான வாழ்க்கைமுறைக்கு அவர்களை வழிநடத்திச் செல்லுதலும் ;

(இ) இளைஞர், முதியோர் என எந்த வயது மட்டத்திலிருந்தாலும் பௌத்த தர்மத்தின் ஊடாகக் கிடைக்கும் வாழ்க்கை மேம்பாட்டைத் தெளிவாக அறிந்துகொண்டு மனித சமுதாயத்தின் பரந்த பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்தும் வகையில் ஒத்துழைப்பையும் ஒற்றுமையையும் அவர்களிடையே மேம்படுத்தி குறுகியவாத பேதங்களிலிருந்து பௌத்த மதத்தைப் பின்பற்றுபவர்களை மீட்டெடுத்தல் ;

(ஈ) சாதி, மத வேறுபாடுகளற்ற, ஒழுக்கம் நிறைந்த சமுதாயமொன்றை ஏற்படுத்தக்கூடிய சமுதாய தனித்துவத்தை இனம்கண்டபின்னர் பௌத்த குடும்பத்தையும் சமுதாயத்தையும் சுயநிறைவுள்ள அலகொன்றாக உருவாக்குதல் ;

(உ) வனவாசம்செய்யும் பிரிவினர் ஊடாக இலங்கைக் கிராமங்களை மையமாகக்கொண்டு தம்மவைப் பரப்புவதற்கு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துகையில் பொருத்தமான திரிபிட்டக தம்மவை நன்கறிந்த பிக்கு சமுதாயமொன்றைக் கட்டியெழுப்புவதும் அர்ப்பணிப்பின் ஊடாக மேற்படி குறிக்கோள்கள் எய்தப்படுவதை உறுதிப்படுத்துதலும் ;

(ஊ) இலங்கையிலுள்ள கற்றறிவாளர்களான குருக்களினதும் பொதுநிலையினரினதும் நலனுக்காக திரிபிட்டக தம்ம நூல்களும் பௌத்த இலக்கியங்களும் அடங்கிய தம்ம ஆராய்ச்சி நிறுவனங்களை அபிவிருத்தி செய்தலும் அவர்களுக்கு அவசியமான வசதிகளை வழங்கும் அதேவேளை சிந்தனை தழுவிய தியானத்தை கடைப்பிடிப்பதற்கு உளதாம் குகைகளுடனான இயற்கைச் சூழலைப் பயன்படுத்துமாறு அவர்களைப் பணித்தலும் ;

(எ) வறுமைநிலைக்குட்பட்ட பௌத்த சிறுவர்களின் உடல்ரீதியானதும் உளரீதியானதுமான அபிவிருத்திக்கு நிதி மற்றும் பொருளுதவிகளின் பங்கீட்டை நன்கொடையாக வழங்குவதன்மூலம் அவர்களது ஆளுமை அபிவிருத்திக்கு அதிகபட்ச பங்களிப்புச் செய்தல் ;

(ஏ) விவசாய மற்றும் பொருளாதார செயல்நுட்பங்களை ஆக்கபூர்வமாகப் பேணுவதற்கு நவீன போதனா மற்றும் சாதன அறிவு தேவைப்படுவோருக்கு அவற்றை வழங்குதல் ;

(ஐ) பௌத்த மதப் பாடசாலைப் பிள்ளைகளின் படிப்பறிவு வீதத்தை அதிகரிக்கும் அதேவேளை பகிரங்கப் பரீட்சைகளை எதிர்கொள்வதில் கல்வித்துறையில் உயர்தொழிலர்களிடமிருந்து மதியுரையும் மேலதிக உதவியும் பெறுவதற்கென அவர்களை வழிநடத்துவதற்கு அவசியமான உடல்ரீதியிலான வளங்களையும் மனித வளங்களையும் அபிவிருத்தி செய்தல் ;

(ஒ) தங்களது குடும்பப் பொருளாதாரத்தை நன்கு முகாமைசெய்வதற்கு சுயதொழில் வாழ்வாதாரங்களை முன்னேற்றுவதில் ஆர்வம்கொண்ட பௌத்த இளைஞர்களுக்கு இது தொடர்பில் தேவையான தொழில் பயிற்சிகளையும் பௌதிக மற்றும் நிதி வளங்களை வழங்குவதன்மூலம் உதவிபுரிதல் ;

(ஓ) கூட்டுத்தாபனத்தின் இலக்குகளையும் குறிக்கோள் களையும் ஒத்த இலக்குகளையும் குறிக்கோள்களையு முடைய உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நிறுவனங் களின் ஒத்துழைப்புடன் செயற்படுவதும் வளங் களைப் பரிமாறுதலும் அவசியமானவிடத்து அந்நிறுவனங்களுடன் கூட்டாகச் செயற்படுதலும் ;

(ஔ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமான நூல்கள், சஞ்சிகைகள், சிற்றேடுகள், செய்தித்தாள்கள், பருவ வெளியீடுகள் என்பவற்றை அச்சிட்டு வெளியிடுதலும் தேவையானவாறு அவற்றை விநியோகித்தலும் ;

(க) முழுமையான ஒரு வாழ்க்கை வாழ்வதற்கு அவசிய மான உடல், உள, சமூக, ஒழுக்கநெறி மற்றும் புலமைத் துவ அபிவிருத்திச் செயற்பாடுகளை ஊக்குவிப்பதற்கு இலங்கையில் அல்லது கடல்கடந்த நாடுகளில் கருத் தரங்குகளையும், உரையாடல்களையும், செயலமர்வு களையும் மற்றும் கல்விசார்ந்த குழுச் செயற்பாடு களையும் நடத்துவதற்கு முழு அனுசரணை வழங்குதல்;

(ங) மருத்துவமனைகளிலும் அவற்றையொத்த நிறுவனங் களிலும் சிகிச்சைபெறும் நோயாளிகள் பங்கேற்புடன் பௌத்த மத அனுஷ்டானங்களை மேற்கொள்ளுதலும் அதன் மூலம் அவர்களுக்கு உடல், உள நிவாரண மளித்தலும் அவர்களது நலனுக்கு அவசியமான ஏதேனும் சேவையாற்றுவதற்கு வலிந்துதவுதலும் ;

(ச) இயற்கை அனர்த்தங்கள் உட்பட பல்வேறு இடர்களை எதிர்நோக்கும் பௌத்த மதத்தைப் பின்பற்றுபவர் களின் உடல், உளத்திடனை மீண்டும் நிலைநாட்டு வதற்கு உடனடியாகத் தலையிடுதலும் அவர்களை மீண்டும் இயல்புநிலைக்குக் கொண்டுவருவதற்கு அவசியமான எத்தன்மையதுமான வழிமுறைகளில் முனைப்பாகப் பங்குபற்றுதலும் ;

(ஞ) சமுதாயத்தினதும் தனியாளினதும் அபிவிருத்திக்கு மனித நல்வாழ்வுக்கு இனம்காணப்பட்ட வாய்ப்புகளை நோக்கி கவனத்தை திசைதிருப்புவதன்மூலம் வலுவான, தீர்க்கமான, குறியிலக்கு வைக்கப்பட்ட சமுதாய வாழ்க்கையொன்றுக்கு அவசியமான மனோபாவங்களையும் ஆற்றல்களையும் அபிவிருத்தி செய்வதன் மூலம் தனிப்பட்ட சுதந்திரத்தை ஊக்குவித்தல் ; அத்துடன்

(ட) காலஞ்சென்ற இராணுவ வீரர்களினுடைய பௌத்த மதத்தைப் பின்பற்றுகின்ற நபர்களின் குடும் பங்களின் உயர்ச்சிக்கு நலம்பேணல் செயற்பாடுகளை ஒழுங்கு செய்தலும் வசதிகள் வழங்குதலும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**4**. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்களின் முகாமை இச் சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கும் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதிகளுக்கும் அமைய ஒலகங்கல மஹா சுதர்ஷன ஆரண்ய சேனாசனயவின் வதிவுள்ள பிரதான மதகுரு, பொதுக் கூட்டமொன்றில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் மூன்றில் இரண்டிற்குக் குறையாத பெரும்பான்மையுடன் தேர்ந்தெடுக்கப்படும் தலைவர், செயலாளர், பொருளாளர், துணைச்செயலாளர், துணைத் தலைவர் மற்றும் ஏழு குழு உறுப்பினர்களையும் கொண்ட ஆளும் சபை ஒன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது ஆளும் சபை, இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முந்திய நாளன்று உறுப்பினர்களாகப் பதவி வகிக்கும் மன்றத்தின் ஆளும் சபையாதல் வேண்டும்.

சொத்துக்களைக் கொள்ளுதல் நிதிகளை முதலீடு செய்தல், கடன் பெறுதல் முதலியனவற்றிற்கு கூட்டுத்தாபனத் திற்குள்ள தத்துவங்கள்.

**5**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனம் –

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப்படக்கூடிய காணிகளை அல்லது கட்டிடங்களைக் கொள்வனவுசெய்வதற்கும், கொள்ளுவதற்கும், வாடகைக்கு எடுப்பதற்கும், நிறுவுவதற்கும் அல்லது வேறுவகையில் பெறுவதற்கும் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக ஆளும் குழுவின் அங்கீகாரத்துடன் அரசாங்க அங்கீகாரம் பெற்ற வங்கிகள், வேறு (உள்நாட்டு, வெளிநாட்டு) நிறுவனங்கள் என்பவற்றிலிருந்து கடன்களை பெறுவதற்கும் பணத்தை திரட்டுவதற்கும் ;

(இ) செலாவணி உண்டியல்கள், காசோலைகள், வாக் குறுதிப் பத்திரங்கள் அத்துடன், ஏனைய கொடுத்து மாற்றத்தகு சாசனங்களை தயாரிக்கவும், வரையவும், கையேற்கவும், கழிவு வழங்கவும், கொடுத்து மாற்றவும், கொள்வனவு செய்யவும், விற்பனை செய்யவும், வழங்கவும், வங்கிக் கணக்குகளை ஆரம்பிக்கவும், செயற்படுத்தவும், பேணவும், முடிவுறுத்தவும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளை ஆளும் குழு பொருத்தமெனக் கருதும்வகையில் முதலீடுசெய் வதற்கும் ;

(உ) ஒப்பப்பணம், மானியக்கொடைகள், நன்கொடைகள் மற்றும் எல்லா அன்பளிப்புகளையும் பரிந்து கேட்கவும் கையேற்கவும் ;

(ஊ) எவரேனும் ஆளுடன், ஏதேனும் கம்பெனியுடன் அல்லது ஆட்கள் குழுவுடன் உடன்படிக்கைகளை அல்லது ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளவும் ;

(எ) ஏதேனும் நிலையான ஆதனத்தை அல்லது தனிப் பட்ட ஆதனத்தைப் பாதிக்கும் சட்டமுறையான நம்பிக்கைப்பொறுப்பு மற்றும் நிபந்தனைகளைப் பொறுப்பேற்கவும், ஏற்றுக்கொள்ளவும், நிறை வேற்றவும், நடைமுறைப்படுத்தவும், நிர்வகிக்கவும் ;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களையும், சேவை யாளர்களையும் நியமனம்செய்யவும், தொழிலுக் கமர்த்தவும், பதவிநீக்கம் செய்யவும், அவர்களின் சேவையை முடிவுறுத்தவும், கூட்டுத்தாபனத்தால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சம்பளங் கள், படிகள், பணிக்கொடைகள் என்பவற்றைக் கொடுப்பனவு செய்யவும் ; அத்துடன்

(ஐ) கூட்டுத்தாபனத்தின் நோக்கத்திற்காக இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் ஆளணியினரைப் பயிற்று விக்கவும்

தத்துவமுடையதாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6.** (1) ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மைகொண்டு பின்வரும் எல்லாக் கருமங்களுக்கும் அல்லது அவற்றில் ஏதேனுமொன்றுக்காக இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தல், அத்துடன் உறுப்பினர்களைச் சேர்த்தல், விலகல், அவர்களை விலக்குதல் அல்லது அவர்கள் பதவி விலகல் ;

(ஆ) ஆளும் குழுவின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல், பதவிதாங்குநர்களின் பதவியை வறிதாக்கல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல், அத்துடன் ஆளும் குழுவின் தத்துவங்கள், கடமைகள், நடத்தை என்பன ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள் மற்றும் சேவையாளர்கள் என்போரின் நியமனமும் அவர்களைப் பதவிநீக்கஞ்செய்தலும் அவர்களது தத்துவங்களும், கடமைகளும் பணிகளும், நடத்தையும்;

(ஈ) ஆளும் குழுவின், கூட்டுத்தாபனத்தின் அல்லது அதன் ஏதேனும் உப குழுக்களின் கூட்டங்களைக் கூட்டும்போதும் நடாத்தும்போதும் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறையும், வெற்றிடங்களை நிரப்புதலும், அத்தகைய கூட்டங்கள் பற்றிய அறிவித்தல்களும், நிகழ்ச்சிநிரலும், அதற்கான கூட்ட நடப்பெண்ணும் அதில் அலுவல்களைக் கொண்டு நடாத்துதலும்;

(உ) ஆளும் குழுவினதும் கூட்டுத்தாபனத்தினதும் உறுப்பாண்மைக்கான தகைமைகளும் தகைமையீனங்களும் ; அத்துடன்

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமை செய்தலும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துதலும்.

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்பட்ட விதிகள் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்டவொரு விதியொன்று என்றாற்போன்று அதேபோன்ற கூட்டத்திலும் அதேமுறையில் திருத்தப்படலாம், மாற்றப்படலாம் அல்லது அதற்கெதுவும் சேர்க்கப்படலாம் அல்லது நீக்கஞ்செய்யப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**7**. கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், கூட்டுத்தாபனத்துக்கு அன்பளிப்பு, இறுதி விருப்பாவணக் கையளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக்கொடைகள் என்றவகையாகக் கிடைக்கப்பெற்றவையும் கூட்டுத்தாபனத்தின் கணக்கிலுள்ளவையுமான எல்லாப் பணங்களும் ஆளும் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் பெயரில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

மன்றத்தினால் செலுத்தப்படவுள்ளனவும் மன்றத்திற்குச் செலுத்தப்படற்பாலனவுமான தனிசுகள்.

**8**. இச்சட்டம் நடைமுறைக்குவரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று மன்றத்திற்குரிய எல்லாத் தனிசுகளும் பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும் கொடுத்துத்தீர்க்கப்படுதலும் வேண்டுமென்பதுடன் அந்நாளன்று மன்றத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் மன்றத்திற்குச் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப் பணங்களும், உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கத்திற்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கணக்குகளும், கணக்காய்வும்.

**9**. (1) கூட்டுத்தாபனத்தின் ஆளும் குழு, கூட்டுத்தாபனத்தின் வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் ஏனைய கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் தகுதிவாய்ந்த கணக்காய்வாளர் ஒருவரால் கணக்காய்வு செய்யப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாக விருத்தல் வேண்டும்.

(4) இப்பிரிவில் "*தகைமைபெற்ற கணக்காய்வாளர்*" என்பது –

(i) இலங்கையின் பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக் கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொரு வராகவும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப் பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள தனியாள் ஒருவர் எனப் பொருளாகும் ; அல்லது

(ii) கணக்காளர் குழுமமொன்றில் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத் தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத் தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றை உடையவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று,

எனப் பொருள்படும்.

**10**. கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மீது அதன் எல்லாத் தனிசுகளையும், பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்த்தபின்னர் எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. ஆனால், அது கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களைக்கொண்டதும் அதன் அல்லது அவற்றின் விதிகளின்படி அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தலிலிருந்து தடைசெய்யப்பட்டுள்ளது மான அல்லது தடைசெய்யப்பட்டுள்ளனவுமான நிறுவனத்துக்கு அல்லது நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது மாற்றப்படுதல் வேண்டும்.

கலைப்பின்மீது எஞ்சியிருப்பதான ஆதனம்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**11.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, செயலாளரினதும், தலைவரினதும் அத்துடன் பொருளாளரினதும் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாசனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாதென்பதுடன், அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் அவர்களது பெயர்களை எழுதி கையொப்பமிடுதல் வேண்டும். அப்படி கையொப்பமிடுதல் எவரேனுமாள் சாட்சியொருவராகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**12.** இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும், குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும், பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**13.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்